# மெட்ரோ டாக்சி, சீருந்தில் 46,000 பேர் பயணம்

**சென்னை, செப். 9–**

மெட்ரோ ஷேர் ஆட்டோ, டாக்சி மற்றும் சீருந்தில், 46 ஆயிரம் பேர் பயணம் செய்து உள்ளனர்.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை மற்றும் பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. இந்த ரயிலில் பயணம் செய்யும் பயணியர், நிலையத்தில் இருந்து செல்ல வேண்டிய இடங்களுக்கு விரைவாக செல்ல ஏதுவாக, குறிப்பிட்ட சில நிலையங்களில், குறைந்த கட்டணத்தில், ஷேர் ஆட்டோ, டாக்சி மற்றும் சீருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

கிண்டி, திருமங்கலம், சின்னமலை, ஈக்காட்டு தாங்கல், கோயம்பேடு மற்றும் பரங்கிமலை நிலையங்களில், ஷேர் ஆட்டோ வசதியும், எழும்பூர், டி.எம்.எஸ்., அண்ணாநகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி மற்றும் தேனாம்பேட்டை நிலையங்களில், ஷேர் டாக்சி வசதியும் செய்யப்பட்டுள்ளன.

இத்துடன், நந்தனம், டி.எம்.எஸ்., ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி., அரசினர் தோட்டம் மற்றும் சென்ட்ரலில் சீருந்து வசதியும் செய்யப்பட்டு உள்ளது.

இந்நிலையங்களில் இருந்து, பயணியர் ஷேர் ஆட்டோவுக்கு, 5 ரூபாய், ஷேர் டாக்சி மற்றும் சீருந்துக்கு, 10 ரூபாய் கட்டணம் செலுத்தி பயணம் செய்யலாம்.

இந்த மூன்று வசதியிலும், ஆகஸ்ட் மாதத்தில், 46 ஆயிரத்து, 118 பயணியர் பயணம் செய்துள்ளனர் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.